# தற்போது நிலவுகின்ற பொருளாதார சவால்களையெதிர்கொள்ள மிகவும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியவர்களுக்கானவோர் குறுங்கால வருவாயினைப் பெற்றுத்தருகின்ற செயற்பாட்டினை சர்வதேச தொழிலாளர் தாபனம் செயற்படுத்துகின்றது.

நடைமுறைப்படுத்தப்படுகின்ற பலதரப்பட்ட திட்டங்களிலும் வடமாகாணத்தில் வதியும் இளைஞர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது.

09, பெப்ரவரி 2023, கொழும்பு (சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் செய்தி) –

மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாரிய சவால்களை எதிர்கொள்ளும் 3,725 பெண்களுக்கும் ஆண்களுக்கும் குறுகிய கால நிவாரணத் திட்டங்கள் ஊடாக, அவர்கள் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும் நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச தொழிலாளர் தாபனம் உதவுகின்றது. விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல், விவசாய நிலங்களை அணுகுவதற்கான பாதைகளை சீர்திருத்தல் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்களை புதுப்பித்தல் தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் தற்காலிக வேலைவாய்ப்புகளை வழங்குதல் இதில் உள்ளடங்கும். இவற்றுடன் இணைந்து, மானிய விலையில் விதைகள் முதல் உபகரணங்கள் வரையிலான விவசாய உள்ளீடுகளை வழங்குதல், கூலி ஆட்கள் மற்றும் நிலத்தை தயார்ப்படுத்துவதற்கான நிதியுதவி, தனியார் துறை ஊடாக சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்வதை வலுப்படுத்தல் என்பனவும் இதில் உள்ளடங்கும்.

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நாட்டின் சனத்தொகையில் ஏறத்தாழ 30 வீதமானோர் உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர். அதே சந்தர்ப்பத்தில், அதிகரித்து வரும் வறுமை வீதம் மேலும் பல குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு கீழே தள்ளியுள்ளது. “ஏற்கனவே நலிவுற்ற நிலையில் வாழ்கின்ற மக்களே, எந்தவொரு நெருக்கடியிலும் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். தேசிய சராசரியை விட அதிகமான அளவில், வேலையின்மை மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக வடக்கு மாகாணம் காணப்படுகின்றது - அங்கு வாழும் நலிவுற்ற மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் தற்போதைய நெருக்கடியில் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர், இவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை போராட்டத்திற்கு மத்தியிலேயே கொண்டுசெல்கின்றனர். குறிப்பாக விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்வாதாரமே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது” என சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் இலங்கை கிளையின் பிரதம தொழில்நுட்ப ஆலோசகரான டொக்டர் தோமஸ் கிரிங் கூறியுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் Local Empowerment through Economic Development and Reconciliation (LEED+) செயற்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் கிடைக்கப்பெறும் நேர்மறையான தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த விநாயகபுரம் உழவர் கூட்டுறவு

சங்கத்தின் பொது முகாமையாளர் முருகேசப்பிள்ளை முரளிதரன், "விவசாய நடவடிக்கைகள் குறைக்கப்பட்டதால் விவசாயிகள், பண்ணையாளர்கள், நாளாந்தம் கூலிவேலை செய்வோர் என நாம் அனைவரும் வருமானத்தை இழந்துவிட்டோம். அந்த வகையில், இத்திட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில், தனிநபர்கள் வீட்டுச் செலவுகளை நிர்வகிக்கவும், தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவும், மருத்துவத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், வீட்டுத் தோட்டத்தை ஆரம்பிக்கவும், விதைகளை வாங்கவும், விவசாயத்தைத் தொடரவும் மற்றும் ஏனைய தேவைகளையும் மேற்கொள்ள முடிகின்றது. இப்பகுதியில் நாங்கள் செய்துமுடித்துள்ள பராமரிப்பு பணிகள், எதிர்வரும் 4 முதல் 5 வருடங்களுக்கு எமது நெல் வயல்களுக்கு பயனளிக்கக்கூடியதாக உள்ளது. கூட்டிணைந்து இந்த செயற்பாட்டை மேற்கொள்வதன் மூலம், சமூகம் மற்றும் உரிமம் தொடர்பான வலுவான உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது".

உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் இரு சிறுகுளங்கள் பழுதுபார்க்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக நீர்ப்பாசன கால்வாய்கள் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. 2028 ஏக்கர் நெல் வயலுக்குச் செல்வதற்கான பாதைகள் மேம்படுத்தப்பட்டன. அத்தோடு, 4 மீன்பிடி இறங்குதளங்கள் மற்றும் கடலுக்குச் செல்வதற்கான 40 கிலோமீற்றர் அளவான பாதைகளும் சுத்தமாக்கப்பட்டன"

"சர்வதேச தொழிலாளர் தாபனத்தின், 'உழைப்பிற்கான ஊதியம்' அடிப்படையிலான இந்த அணுகுமுறையின் தாக்கம் பலதரப்பட்டதாகும். 2022ஆம் ஆண்டில் கட்டுப்படுத்தப்பட்ட அரசாங்க செலவீனங்களால், திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வழக்கமான பராமரிப்பு ஸ்தம்பிதமடைந்தது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்பாடானது, விசேட தேவையுடையோர் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளிட்ட தேவைப்பாடுடைய அனைவருக்கும் நேரடி வருமான வழியை வழங்கியதுடன், தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை நிறைவு செய்வதற்கான பொறிமுறையையும் ஒரே நேரத்தில் உருவாக்கியது. இதன் மூலம் விவசாயிகள் அடுத்த பருவத்தில் விவசாய நடவடிக்கைகளைத் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது" என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இராஜரத்தினம் பரணீகரன் குறிப்பிட்டார்.

உலர் மீன் உற்பத்தி, வலைகளை பழுதுபார்த்தல், மற்றும் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் வாழ்வாதாரம் என்பன மீன்வளத்தையே நம்பியுள்ளது என அன்புபுரம் மீனவர் கூட்டுறவு சங்க பொருளாளர் அமீர் லோகாதேவி குறிப்பிட்டார். "படகுகள் தொழிலுக்காக கடலுக்குச் செல்லாதபோது பெண்களாகிய எமது வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் போகின்றது. தமது அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்காக, அதிக வட்டிக்கு கடன் பெறுதல், சொத்துக்களை விற்றல், நாளொன்றிற்கு ஒரு வேளை உணவை மட்டும் உட்கொள்ளுதல் மற்றும் அபாயகரமான வேலைகளில் ஈடுபடுதல் போன்ற எதிர்மறையான சமாளிக்கும் உத்திகளை ஏற்கனவே பலர் கடைப்பிடித்தனர். இந்நிலையில், இத்திட்டத்தின் ஊடாக அவர்களது கஷ்டங்களை ஓரளவு நிவர்த்திக்க முடிந்தது" என்றார்.

பொருளாதார நெருக்கடிக்கு அதன் தொடர்ச்சியான உதவியின் ஒரு பகுதியாக இந்த ஆதரவு செயற்றிட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில், 1000 இளைஞர்களுக்கு முன்கூட்டிய கற்றலுக்கான (RPL) அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்து, அவர்களின்

வேலைவாய்ப்பை வலுப்படுத்தல், 600 சோளம் மற்றும் நிலக்கடலை விவசாயிகளுக்கு ஆதரவளித்தல் ஆகியனவற்றை LEED+ திட்டம் முன்னெடுக்கும்.

*அவுஸ்திரேலிய அரசாங்க வெளியுறவு மற்றும் வர்த்தகத்துறை (DFAT) மற்றும் நோர்வே அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் LEED+ திட்டம், சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் சமாதானம் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் (Jobs for Peace and Resilience) உலகளாவிய வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.*